Arima Nokku

# அரிமா நோக்கு

6:4 சனவரி 2013

ரூ.30

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
6:4 சனவரி 2013

பிரதிபா ரே
- *வ. ஜெயதேவன்* 03

Dialect depicted by Imayam
- *N.Chandra Segaran* 04

சி. வை. தாமோதரம் பிள்ளையும் சுவடிப் பதிப்பும்
- *ஜெ. முத்துச்செல்வன்* 09

The Pronominal Terminations of Second Person in Early Tamil
- *S. Saravanan* 14

மேலைக் கவிதையில் முதல் ஆழ்வார்கள்
- *ப. மருதநாயகம்* 17

தமிழிலக்கியத் திறனாய்வில் கா. சிவத்தம்பியின் இயங்குநிலை
- *நா. சுப்பிரமணியன்* 28

பதினோராடல்கள்
- *க. நர்மதா* 34

சோலை சுந்தரபெருமாள் புதினங்களின் வட்டாரச் சிறப்பு
- *கா. தில்லையாடி வள்ளியம்மை* 40

செம்மொழியைச் சேர்த்திடுவோம் எட்டுத் திக்கும்
- *வீ. மலர்க்கொடி* 45

*தொல்காப்பியம் நன்னூல் காட்டும் வேற்றுமைகள்*
- *தி. சம்பத்குமார்* 48

அனிச்சம்
-*இரா. பஞ்சவர்ணம்* 52

குறுந்தொகையில் விழுமியங்கள்
- *க. ஞானஜோதி* 54

பாத்தென்றல் முருகனடியானின் திண்ணப்பர் பிள்ளைத்தமிழ்
- *ஆ. ரா. சிவகுமாரன்* 59

Syntactico-Semantic Study of Particles in Modern Malaysian Tamil
- *K. Karunakaran and R. Krishnan* 64

*மற்றும்*

*நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதை, துணுக்குகள்*

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## நடப்பாய் வாழி காவேரி

நெடிய காத்திருப்புக்கும் நெடுமூச்சுப் படிந்த கவலைகளுக்கும் பிறகு காவிரித் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு இந்திய நடுவண் அரசு இதழில் வெளிவந்துவிட்டது. எனினும் இனியில்லை தடையற்ற காவிரி வெள்ளத்திற்குத் தடை என்னும் மனநிறைவு இதனால் ஏற்பட்டுவிடாது.

தீர்ப்பாயத்தின் தீர்ப்பு வெளிப்பட்டு, ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசு இதழில் வெளியிடாக் காலத்தாழ்ப்புப் போலவே, நடைமுறைப் படுத்துதலுக்கும் காலம் நீளுமோ என்கிற ஐயப்பாடு தமிழ் மக்கள் மனத்தில் எழவே செய்யும்.

இத்தீர்ப்பின்படி ஆண்டுக்கு 192 ஆ.மி.க. காவிரி நீர் தமிழ்நாட்டுக்குக் கருநாடகம் திறந்துவிடவேண்டும் (1 ஆ.மி.க. = 100 கோடி கன அடி). இதில் 10 ஆ.மி.க. சுற்றுச்சூழல் நலப்பாட்டுக்கு ஒதுக்க வேண்டும். புதுச்சேரிக்கு 7 ஆ.மி.க. தண்ணீரைத் தமிழகம் தரவேண்டும். எனவே இப்பங்கீடே, தாகித்துக் கிடக்கும் தமிழகத்திற்கு, யானைப் பசிக்குச் சோளப்பொரி போன்றதுதான். எனினும் இதுதானும் குறைவின்றி முறையாக நிறைவேறுமா?

காவிரித் தீர்ப்பாயம், தீர்ப்பைச் செயல்படுத்த நடுவண் அரசு காவிரி மேலாண்மை வாரியம் ஒன்றை உருவாக்குவதோடு, மேலாண்மை வாரியத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றக் காவிரி ஒழுங்குமுறை ஆணையத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துகிறது. 1991ஆம் ஆண்டு, தீர்ப்பாயத்தின் தீர்ப்புப்படி ஒவ்வோர் ஆண்டும் தண்ணீர் கேட்டு உச்சநீதி மன்றத்தைத் தமிழக அரசு அணுகுவதும் - போதிய இருப்பு இல்லை என்று கருநாடகம் கையை விரிப்பதும் இல்லாதபடி - முதலில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புப்படி ஆண்டுதோறும் காவிரி நீர் கிடைக்க என்ன பொறியமைவுகள் தேவையோ - அவற்றை அமைக்கவேண்டும். இல்லை எனில், கண்முன் நிறைவேறாத காகிதக் கனவுகளாகவே இத்தீர்ப்பும் இருந்துவிடும்

உச்சநீதிமன்ற வழக்குகள் முடியும்முன், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கமாட்டோம் என்று சொல்வது சட்ட விரோதம் என்பதை நடுவண் அரசு உணரவேண்டும்.

எந்தத் தீர்ப்பையும் ஏற்கமாட்டோம் என்று முரண்டு பிடிக்கும் கர்நாடக அரசு இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்படுகிறது என்பதை உணர்ந்து - அதனை ஆற்றலோடும் அதிகாரத்தோடும் நடுவண் அரசு கட்டுப்படுத்த வேண்டும். ◆

ஆய்வறிஞர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் நற்செய்தி

அரிமா நோக்கு இதழ் உலகத் தரத் தொடர் எண் (International Standard Serial Number) பெற்றுள்ளது. எண் விவரம்: ISSN 2320-4842

*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*

*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. கணேசன் (அமெரிக்கா)

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

மருதூர் அரங்கராசன்

பெ. இலக்குமிநாராயணன்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 3000/-US | $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 5000/- US | $ 200 |

நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership)
ரூ. 10,000/- US $ 500

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

கட்டணம் செலுத்த:

**DD in favour of *'Nokku'* payable at Chennai**
**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**
**S.B. A/c No. 16810100006423**

## அரிமா நோக்கு

4/ 1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448